மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 234/2025 |
| பெயர் | : | அய்யப்பன் (PW3) |
| த/பெ. | : | |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Pottinarayanan is produced from Judicial Custody .)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14 th day of November 2025

**முதல் விசாரணை**

1)நான் புதியம்புத்தூர் தெற்கு காலனியில் வசிக்கிறேன்.நான் கறிகடை வைத்துள்ளேன். சாட்சி சண்முகராஜை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

2)21.08.2025 ஆம் தேதி காலை 10 மணியளவில் நான் வீட்டிற்கு கிழக்காக சம்பவம் நடந்த வழியாக சென்று கொண்டிருந்தபோது புதியம்புத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளரும் எழுத்தரும் சம்பவம் இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள்.படம் வரைந்து எழுதியதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்,என்னுடன் சாட்சி சண்முகராஜ் சாட்சி கையொப்பம் செய்தார்.**(மேற்படி பார்வை மகசர் அ.சாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3)என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.அத்தாட்சியில் நானும் சண்முகராஜீம் கையெழுத்து செய்தோம். அந்த கையொப்பம் தெற்கு காலனி போகும் வழியில் உள்ள சக்தி வீட்டின் முன்பு உள்ள துணி மூட்டையில் இருந்து ஒரு புளூ கலர் கைப்பிடி போட்ட கத்தரிக்கோலை எடுத்தற்காக செய்து கொடுத்தேன்.கத்தரிக்கோல் எடுக்கும்போது காலை 11.30 மணி இருக்கும்.**(மேற்படி அத்தாட்சி அ.சாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 ஆன கத்தரிக்கோல் போலிசார் துணிமூட்டையில் இருந்து எடுத்த கத்தரிக்கோல் ஆகும் .போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1)நான் புதியம்புத்தூர் மெயினில் கறி கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான்.போலிசார் எனது கடையில் வந்து கையெழுத்து வாங்கியிருந்தால் எனது கடைக்கு எதிர்த்தாற் போல் அம்மா மெடிக்கல் கடையில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவாகியிருக்கும் என்றால் சரிதான்.வாதி சக்திவேல் வீடு எந்த தெரு என்றால் தெற்குகாலனி போகும் வழியில் உள்ளது.எனது வீடு வேறு தெருவில் உள்ளது என்றால் சரிதான்.

2) சாக்குமூட்டை சக்தி வீட்டிற்கு எந்த பக்கம் இருந்தது என்றால் வடக்கே இருந்தது.நான் எதற்காக அங்கு சென்றேன் என்றால் நான் என்வீட்டிற்கு சாப்பிடுவதற்காக சென்றேன்.போலிசார் விசாரிக்கும் போது மேற்கண்ட விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன்.இதற்கு முன்பாக 3,4 வழக்குகளில் காவல்நிலையம் சென்று பார்வை மகசர் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் காவல்நிலையம் சென்றுள்ளேன்.பார்வை மகசரில் இரண்டு வழக்குகளில் கையெழுத்து செய்துள்ளேன்.

3)நான் சொன்ன மாதிரி நான் சொன்ன நாள் நேரத்தில் போலிசார் வந்ததாக சொல்வதும் போலிசார் வரவில்லை என்றாலும் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல.நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–திருமதி.ப.சுமதி
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.